True copy. [signature] Editor

Registered as a Newspaper at the G. P. O.

# ஜனதர்மபோதினி

ஒன்றே குலமும்
ஒருவனே தெய்வமும்
"திருமூலர்"

# JANA DHARMA BOTHINY

OR

## NEW JAFFNA

A Monthly Newspaper

"சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி."

**சந்தா விளம்பரம்**

| | |
|---|---|
| தபாற்செலவின்றி ஆ ஒன்றுக்கு ரூ. | 1.00 |
| தபாற்செலவுட்பட ,, ,, ,, | 1.25 |
| மலாய்நாட்டிற்கு ,, ,, ,, | 2.00 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
சந்தாப்பணம் முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

**விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| 1 | கலம் முதன்முறை ரூ. | 5.00 |
| $\frac{3}{4}$ | ,, ,, ,, ,, | 4.00 |
| $\frac{1}{2}$ | ,, ,, ,, ,, | 3.00 |
| $\frac{1}{4}$ | ,, ,, ,, ,, | 2.00 |

அடுத்தமுறைகளில் அரைவாசி.
சில்லறை விளம்பரங்களுக்கு முற்பணங்கட்ட வேண்டும்.

புத்தகம்—1, } யாழ்ப்பாணம்—தெல்லிப்பழை.-பிரமோதூத ஆ கார்த்திகை மீ (1930 நவம்பர்.) { இலக்கம்—7.

KACHCHERI 6-DEC 1930 JAFFNA

## புதினக்குறிப்புகள்

### புலோலிக் காவடிவழக்கு

பருத்தித்துறையில் களவர் காவடியெடுக்கவோ மேளமடிக்கவோவென வேளாளர் இருண்டகாலத்திற் கிரண்டெழுந்தவெள்ளமென எதிர்த்த விஷயமாய் சென்ற பத்திரிகையில் எழுதினோம். அதில் 2 வழக்குகள். ஒன்றில் 40 பேர் எதிரிகள். மற்றதில் 6 பேர் எதிரிகள். இரண்டு வழக்குகளும் விளங்கி முடிந்தன. 6 பேர் எதிரிகளான வழக்கில் எதிரிகள் ஒவ்வொருவருக்கும் மும்மூன்றுமாச மறியற் தீர்ப்பிடப்பட்டது. இவர்கள் பொது ஒழுங்கையைச் சொந்த ஒழுங்கையெனச் சொல்லி யனுப்பியவர்கள். இவர்கள் சுப்பிறீங்கோட்டுக்கு அப்பீல் செய்திருப்பதினாலே 40 பேர் எதிரிகளானமற்றவழக்குக்கு தீர்ப்புக் கூறப்படவில்லை. அப்பீல் மறுமொழிகண்டுதான் இவர்களுக்குத் தீர்ப்புக்கூறப்படுமாம்.

### கோயிலுட்கொலை

நந்தாவதியென்ற இளம்பெண்ணும் அவளின் சிசுவும் கொலைசெய்யப்பட்டு தங்காலைப்பகுதிப் பௌத்த கோயிலொன்றுக் கருகாமையாயுள்ள 53 அடி ஆழமான குகையில் வீசப்பட்டிருக்கக்கண்டனர். தங்காலைப் பொலீஸ்கோட்டில் மெஸ். J. N. ஆறுமுகம் நீதவானவர்களால் விசாரணை நடைபெறுகிறது. புத்தகுருவும் அவரின் நண்பர் 6 பேரும் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். குருவானவர் இந்தச் சிசுவின் தகப்பனென்பதை ஒத்துக்கொண்டபோதிலும் கொலையைப்பற்றி எதுவுமறியேனென்கிறார்.

### தாங்கொணாவசை

அடுத்தவீட்டுக் கைம்பெண்ணாலேவப்பட்டு தனது பராயமான மகன் ஏதோ பிழையாய் நடந்த வசையைச் சகிக்க முடியாத சழுத்துறைப்பகுதியைச் சேர்ந்த ஒருவன் இந்த கைம்பெண்ணின் வீட்டுட் புகுந்து அவளை ஊறுபடுத்தினான். அந்நேரம் குரவையுடன் முன்வந்த அவளின் ஒரே குழந்தையாகிய 6 வயதுப் பாலகன் தலையில் மோசமான அடிபட்டு உடனே உயிர்துறந்தான்.

### கடன்கொடுத்தோன் தெண்டமிடப்படல்

கொடுத்தகடனைக் கேட்ட காரணமாயெழுந்த சண்டையில் கடன்வாங்கியவன் கத்தியாற் குத்தப்பட்டானென்ற ஓர்வழக்கு மட்டக்களப்புக் கோட்டில் விசாரிக்கப்பட்டு எதிரியாய் நின்ற கடன்கொடுத்தவன் 50 ரூபாய் அபராதம் அல்லது 2 மாதக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டான்.

### மகளுக்குக் கொள்ளிவைத்த மாதா

தொடங்கொட என்ற இடத்தில் தனக்குக் கீழ்ப்படியாததற்காக ஜூசென்னோனா என்ற தன் மகளைப் பிரம்பாலடித்து மரத்துடன் கட்டிவைத்து அவளின் காலில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கோலாற் சுட்டாளென்று ஒரு சிங்கள மனுஷி குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறாள். காயமடைந்த பள்ளை களுத்துறை ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையிலிருக்கிறாள். தான்செய்த குற்றத்தைத் தாயானவள் கோட்டில் ஒத்துக்கொண்டாள்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

இலங்கைத் திறைசேரி வற்றுகிற காரணமாக அரசாங்க உத்தியோகங்கள் பல நிறுத்தப்படுகின்றன. பகிரங்க வேலைப்பகுதியில் புதியவேலைகள் தொடக்கப்படாதிருக்கின்றன. உத்தியோகஸ்தருக்குக் கட்டாய இளைப்பாறுதல் 55 வயதிலெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கீழ்வகுப்புகளிலும் நியமனம் பெறாத உத்தியோகங்களிலுமிருந்த பலர் வேலையால் நீக்கப்படுகின்றனர். உத்தியோகஸ்தரின் தொகையைக் குறைத்து எஞ்சினோரைக்கொண்டு கூடியநேரம் வேலைசெய்விக்க யோசனைநடக்கின்றது. சிங்கப்பூர்ப் பகுதிகளிலிருந்து வேலைநீக்கத்தால் திரும்பிவரும் யாழ்ப்பாணிகளுடன் உள்ளூர்த் திண்டாட்டமுங்கூடிப் பஞ்சத்தை அதிகரிப்பிக்கும்போற் தெரிகிறது.

### தாசிசெய்யக்கூடியது எது?

யாழ்ப்பாணத்தில் கோவிற் தாசியாக பேர்பெற்றிருக்கும் ஜகத்தம்பாளென்னும் கன்னிகையாலும் அவளின் சார்பினராலுமேவப்பட்ட சிலர் சிங்கப்பூரில் சமாதான நீதவானாயிருக்கும் ஒரு செல்வந்தரின் மகனாகிய மெஸ். C. பொன்னம்பலமென்பவரை வண்ணார்பண்ணையில் கத்தி பொல்லுகளுடன் சருவினவழக்கு முடிவானது இதில் 2 ம் எதிரிக்கு 3 மாதக்கடுஞ்சிறையும் 75 ரூபா தெண்டமும், 1ம், 3ம், 5ம், 6ம் எதிரிகள் ஒவ்வொருவருக்கும் 1 மாதக்கடுஞ்சிறையும் 75 ரூபா தெண்டமும் விதிக்கப்பட்டது.

### களவுக்கு எல்லைவரம்பு

புகைரதப்பகுதிப பிரயாணிகளுக்கு போகவரக் கொடுக்கும் டிக்கற்றுகளில் இதுவரையும் நடந்துவந்த களவுகள இனிமேல் நடைபெறாதபடி ஒரு புதுமுறை இம்மாதம் 1 ந் திகதி தொடங்கி அனுசரிக்கப்படுகிறது. திரும்பி வருவதற்குரிய பாதிப்பங்கு ஒருமுறைக்குமேல் பாவிக்கப்படாதபடி அதைக்கொண்டு பயணம்பண்ணும் முன் முறையிற்றானே புதியமெசின்மூலம் டிக்கெற் சோதனைகாரரால் வெட்டடையாளமிடப்படும். அந்த வெட்டில் திகதியும் குறிப்படுமாதலால் அதை இன்னோர் திகதிக்கு களவாகப் பாவிக்க [illegible] ம. ஆனால் டிக்கெற்றை [illegible] புது முழுத்டிக்கெற் எடுக்கும் முறையேயன்றி மறுமுறைகள் சரிவரா.

### கோட்டில் மாத்திரம் ஊமையோ?

நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த ஒருவன் காரணமின்றி இராநேரத்தில் வேறொருவரின் வீட்டறையுட் காணப்பட்டதாக நீதாவன்முன் பொலீசாராற் கொண்டுவரப்பட்டான். கேட்ட கேள்விகளுக்குப் பதிலாக வாய்திறவாது சைகை காட்டினான். அவன் ஊமையனென்று சொல்லப்பட்டதாலும் குற்றவாளியின் சைகைகளை கோட்டார் அறியமுடியாததாலும் கோட்டடியில் நின்ற அவனுடைய சகோதரன் சைகைகளை விளங்கப்படுத்தும்படி கூப்பிடப்பட்டான். மறுபடியும் கேள்விகள் கேட்கப்பட்டபோது ஊமையின் சைகைகள் தனக்கே விளங்கவில்லையென்று அவனின் சகோதரனும் பாசாங்கு பண்ணியதால் இருவரும் குற்றவாளிகளாக்கப்பட்டனர். வழக்குத் தவணை போடப்பட்டது.

### சாதிப்பெருமைக்கு 50 ரூபா தெண்டம்

வேளாள வகுப்பைச் சேர்ந்த தம்பாப்பிள்ளையென்பவர் கோவிய வகுப்பினரான நல்லதம்பியென்பவரை பொய்ச்சாட்சிபகர அழைத்ததாகவும் அதற்குடன்படாததின்பேரிலெழுந்த ஆவேசம் சாதியபிமான நெருப்புடன்கூட கல்லாலெறிந்ததாகவும், கல்லானது நல்லதம்பியின் மனைவிதலையிற் காயமுண்டாக்கியதாகவும் மல்லாகம் கோட்டில் ஒரு வழக்கு விளங்கப்பட்டது. இதில் வெள்ளாள தம்பாபிள்ளைக்கு 1 நாள் மறியலும் 50 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

### சாப்பாட்டு மேசையிற்கொலை

புத்தளத்தைச்சேர்ந்த உடையார் மெஸ். கிறிஸ்றி ஜூசாய்ஜூ என்பவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் தருணம் துப்பாக்கியாற் சுடப்பட்டு உடனே மரித்தார். பாதகன் யாரென்று இன்னும் வெளிவாராதபடி இது ஓர் மர்ம செயலாயிருக்கிறது. பக்கத்திலிருந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த அவரின் மனைவி துப்பாக்கிச் சப்தங்கேட்டதும் பக்கத்தில் இடிவிழுந்ததென்றெண்ணி கண்ணை இறுகமூடிப் பயந்திருந்ததாயும் கண்ணைத்திறந்தபோது தன் புருஷனை பிரேதமாகக்காண நேரிட்டதென்றும் பரிதாபசங்கதி சொல்லுகிறா. பிள்ளைகளும் நித்திரையிலிருந்தெழும்பி தகப்பனை பிரேதமாயே கண்டனராம். இப்பாதகஞ்செய்தது எவரென்பது இன்னும் வெளிப்படவில்லை.

### சாட்சிக்கூட்டில் ஜீவன் பிரிதல்.

சென்ற ஐப்பசிமாதம் 21 ம் திகதி சென்னபட்டின பொலீஸ் கோட்டில் கவிஸ் கசேன் என்ற ஒரு கடைக்காரன் சாட்சிக்கூட்டில் விடப்பட்டு கேள்விகேட்கப்படும்போது இரத்த உவாந்தியெடுத்து உடனே உயிர்விட்டான்.



## கௌரவ சேர் பொன். இராமநாதன் அவர்களின் பிரிவு

## Death of the Hon'ble Sir, P. Ramanathan KT, K. C. M. L. C., C. M. G, J. P., F. R. E. S., M. C. B. R. A. S.

உலகின் எத்திசையிலும் பெரும்புகழ் நிறுவிய பேரறிவாளரும், தேசாபிமானியும், உத்தண்ட கெம்பீர வாசால சிங்கமும், இலங்கையின் உத்தம ஊழியனும், சுதேசிகளின் வழிகாட்டியுமான ஸ்ரீமான் கௌரவ சேர் பொன்னம்பலம் இராமநாதனவர்கள் சிலநாள் வியாதிப்படுக்கையிலிருந்து தமது வயோதிப திசையான 79 ம் வயதில் இம் மாதம் 26 ம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்குக் கொழும்பில் "சுகஸ்தானம்" எனப் பெயர்பெறும் தமதில்லத்தில் பிராணப்பிரயாண செய்தி இலங்கையாருக்கு இடிவிழுந்ததுபோலாயிற்று.

சேர் இராமநாதனவர்கள் இராசவாசல் முதலியார் பொன்னம்பலமவர்களின் இரண்டாம் புதல்வனாக 1851 ம் ஆண்டு சித்திரைமாதம் 16 ந் திகதி பிறந்தார். இவர் கல்வி நிபுணராய்த் தற்போது ரோயல் கல்லூரியெனப்படும் கொழும்பு அக்கடமிக் கலாசாலையிற் கற்று அப்பால் சென்னைக் கலாசாலைக்கேகினர். 28 ம் பிராயத்தில் (18.9 ம் ஆண்டு) இலங்கைச் சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதியாகி இடையில் அற்றோணிச் செனறலாயும், சொலிசிற்றர் செனறலாயுமிருந்த காலம்போக மிகுதிக் காலமெல்லாம் சட்டசபையில் இலங்கையின் தறகால நிலைமைக்கு வழிகோலினர். யாழ்ப்பாணத்துக்குப் புகைரதப் பாதை திறக்கப்பட்டது இவரின் அரும் பெரும் முயற்சிகளுளொன்று. 1886 ம் ஆண்டில் முதன்முதல் இங்கிலாந்துக்குப் போனார். அங்கிருந்து திரும்பியபின் சட்டசபையில் விசேஷ அங்கத்துவத்தைப் பெற்றார். 1889 ம் ஆண்டில் இவருக்கு C. M. G. என்ற பெரிய பட்டமளிக்கப்பட்டது. 1905 ம் ஆண்டில் அமரிக்க ஐக்கியமாகாணஞ் சென்று ஆங்கு செய்த பிரசாரணங்களால் கீழ்த்தேச கலைவிநோதர் என்றழைக்கப்பட்டார். அங்கிருந்து திரும்பி மறுபடியுந் தமது சீவியத்தின் மற்றோர் அத்தியாயத்தைத் தொடர்ந்தார். 1911 ல் இலங்கைக் கற்றோர் பிரதிநிதியெனும் வெற்றிப் பிரவேசமடைந்தார். 1915 ம் ஆண்டில் இலங்கைக் கலவிவிஷயமாய் இவர் செய்த வேலைகள் இலங்கையார் மனதில் இவரைவிட்டுப் பெரிய எண்ணத்தையுண்டாக்கின.

1921 ம் ஆண்டில் "சேர்" எனும் நைற் பட்டத்தைப் பெற்றார். இவரின் முதல் மனைவியான நல்லதம்பி முதலியாரின் மகள் 1904 ல் இறந்துபோக, 1907 ம் ஆண்டு அட்லெயிட் பட்டணத்து F. D. கரிசன் துரையின் மகளான ஐரோப்பிய மாதை மணம்புரிந்தார்.

இவர் ஆங்கில மொழியில் வெகு நாவன்மை படைத்த கலைவிநோதராய் மாத்திரமன்று சைவமதத்தைப் புதுக்கிய ஓர் தண்ணருளாளருமாவர். இவர் தமிழ் மக்கட்கல்வியின் வேணவாவோடு கல்லூரிகளமைத்த ஞானசூரியன். இலங்கைச் சட்டசபையில் 52 ஆண்டுகளாக கெம்பீரமாய் வீற்று வெற்றி சிறந்த தனித் தமிழ் வீரன். தன் சுய இயக்கத்தால் கோயில்கள் மடங்கள் கட்டுவித்த, பெருந்தகையாளர்.

தமிழர் தலைவனாய் மாத்திரமல்ல இலங்கைத்தலைவனாய் இவர் விளங்கியபடியால் இவரின் பிரிவானது தமிழருக்கு மாத்திரமல்ல மற்றும் பலதிறத்தவர்க்கும் பலமதத்தினர்க்கும் வெகு துயரத்தை [illegible] பத்திரிகைகள் யாவும் புலம்பத்தொடங்கின. கொழும்பின் வீதிகளெங்கும் துக்கக்கொடிகளுடன், துயரமயமாயிருந்தன. இவரின் உடலம் மறுநாட்பிற்பகல் $4\frac{1}{2}$ மணியளவில் இவரின் மாளிகையினின்று கொழும்புக்கோட்டை புகைரத ஸ்தானத்திற்குச் சமாதிபிருத்திக்கொண்டு போகப்பட்டது வீதிகளெங்கும் வெள்ளைக்கொடிகள்தொங்க, இருமருங்கும் ஆயிரக்கணக்கானோர் புடைசூழ, முதல் தமிழராலும் பின்பு சிங்களவராலும்மற்றவர்களாலும் இழுத்துக்கொண்டு போகப்பட்டது கோட்டையின் வீதிகளெங்கும் இலட்சக்கணக்கான சனங்கள் குவிந்திருக்க, மின்சாரவண்டிகள் முதலாயன அசைவற்றுநிற்க நிர்ச்சப்தமயமான கூட்டத்துள் சமாதிகொண்டுபோகப்பட்டு இதற்கெனபிரத்தியேகமாய் ஆயத்தப்படுத்தியிருந்த புகைரதப் பெட்டியுள் வைக்கப்பட சுற்றமித்திரருடன் புகைவண்டி புறப்பட்டது. மறுநாட்காலைபுகைவண்டி யாழ்ப்பாண ஸ்ரேசன் சேர்ந்ததும் அங்கு குழுமிய படைசனங்களுடன்வெகுஅமைதியாயும்விமரிசையுடனும் திரேகம் இராமநாதன் கல்லூரிக்கு கொண்டேகப்பட்டு அங்கு சாயந்தரம் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. சட்டசபை அங்கத்தவரில் திகமானோர் இதற்கென யாழ்ப்பாணத்திற்கு பிரேதச்சடங்குக்குவந்தனர். தேசாதிபதியவர்களும் தன் பிரதிநிதியாக ஒருவரை அனுப்பியிருந்தார்.

இலங்கையிற் தமிழரின் பெயர் இவருடன் மங்கிற்றெனல் மிகையாகாது. இந்த மகானின் இடத்தை நிரப்ப இன்னோர் புதல்வனை இலங்காமாது எப்போ பெறுவாளோ யாமறியோம். பொருட்செல்வமும் அருட்செல்வமும் நிரம்பியவராய் லோகோபகாரியாய் இலங்கையின் தலைபாக இன்னொரு தமிழன் சீவிக்க முடியவே முடியாதென்போம்.

யாழ்ப்பாணத்தவர் என்றும் சிலாகிக்கும் ஸ்தாபனங்களாகிய அவர் ஆக்கிய இரு கழகங்களும் அவரின் ஞாபகஸ்தம்பங்கள்போல விளங்கி நிற்கின்றன. ஒடுக்கப்படுவோரின் உயர்ச்சிக்குரிய வேலைசெய்பவர்களுடன் கலந்துகொள்ளாவிடினும் எங்கள் குறைவுகளை மனதார உணர்ந்து வித்தியாசங்கத்திலும், பிரபுக்களின் பொதுச் சபாசங்களிலும் தருணத்துக்கேற்ற விதமாய் எமது விஷயத்தைக் கவனித்து நடந்துகொண்டது மறக்கற்பாலதல்ல. எம் சங்க விகிதரும் வேறு சில கொழும்பு அங்கத்தவரும் எங்கள் போல் பிரேதச்சடங்கிற் பங்குபற்றி எம் அனுதாபத்தை வெளிப்படுத்தினர்.

### விசேஷ அறிவிப்பு

பத்திரிகையனுப்பும்படி கேட்கப்படாதிருந்தும் சிலபெரியமனுஷர்களுக்கு எங்கள்பத்திரிகையை ஒழுங்காய் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் எங்கள் சாகியத்தவரின் உயர்ச்சியை விரும்பி எங்கள் பத்திரிகையை ஆதரிப்பது வெகுசந்தோஷம். ஆனால் வெகுசிலர் பத்திரிகையை வேண்டாமென்றறிவித்ததுண்டு. பத்திரிகை வேண்டாமென்றெண்ணுபவர்கள் தயவுசெய்து எமக்கு உடனே அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

## ஜனதர்மபோதினி

பிரமோதூத ௵ ஐப்பசி ௴

### ஜீவ இம்சை

நம்நாட்டில் அநேகமாய் உலகில் வேறெங்கும் இல்லாததும் மனிதத் தன்மைக் கொவ்வாததும் பகுத்தறிவுக்கும் நியாயத்துக்கு மேற்காததுமான கொடுமைகள் பல இருந்துவந்தாலும் அவற்றுள் வெகு கொடூரமானதும் உடனே தீர்க்கப்படவேண்டியதுமான கொடுமைகளாகத் தற்போது உள்ளவை இரண்டு.

தமிழர் காட்டுமிராண்டிகளல்ல வென்பதையும் அவர்கள் மனுஷ சுபாவமும் நாகரீகமுமுடையவர்களென்பதையும் சுய ஆளுகைப் பக்குவமுடையவர்களும் நற்சுபாவமுமுடையவர்களென்பதையும், பதர்த்தன்மையற்ற நல்ல விளைந்த முற்றிய மணிகளென்பதையும் தமிழரான நம்மாட்கள் நாட்டிக்காட்டவேண்டுமாயின், அவர்கள் நீக்கவேண்டிய தீமைகள் இரண்டாகும்.

முதலாவது ஏதென்றால், தமிழ்மக்களிலேயே பலசனங்களையடக்கிய பல சமூகத்தினரைப் பிறவியிலேயே தீண்டாதாரெனக் கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களினுங் கேடாகவும், உணர்ச்சியட்டுமேயுள்ள பூச்சி புழுக்களினும் இழிவாகவும் மதிப்பதும் நடத்துவதுமாகும்.

இரண்டாவது ஏதெனில், பெண்கள் ஆண்களைப்போன்ற சம உரித்தும் சலாக்கியமுமுடையவர்களாய் வாராதபடி அவர்களைத் தடுத்து வைத்துக்கொள்ள வேணுமென்ற அர்த்தமற்ற கொள்கையாகும்.

இவைகளில் முந்தியதான சாதிக் கொடுமையானது நம் நாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டாவது நிலைபெற இடங்கொடாதிருப்பது மகா அவசியமென்பது பெரியோர் நோக்கு. இதினாலேயே இவ்விரு விஷயங்களும் அழிக்கப்படாமல் இந்தியாவுக்குச் சுயராச்சியமெனும் ஆட்சிப் பூரண சுதந்திரங் கேட்பதோ, இந்திய பாதுகாப்பையும், ஆட்சி நிர்வாகத்தையும் இந்தியர் தாமே பார்த்துக்கொள்ளுகிறோமென்பதோ, இந்தியாவுக்கு அன்னிய சாதிகளின் சம்பந்தம் வேண்டாமென்று சொல்வதோ ஒரு முடிவுக்கு வாரமல் இருக்கின்றது. சாதி வித்தியாசமே இந்திய சுயராச்சியத்துக்கு இடறுகட்டையென்பது மகாத்துமா காந்தி அவர்களின் வெளிப்படையான கொள்கை. இதுவே இந்திய சுயராச்சிய இளவாசன் என்று கூறப்படும் யவகர்லால் நேரு பண்டிதரின் கொள்கை.

சாதிவித்தியாசம் இந்தியாவைப்போலவே இலங்கைத் தமிழர்மட்டில் இருந்தாலும், பெண்கள் விஷயம் நம் நாட்டில் இந்தியாவைப்போல அவ்வளவு சீர்கேடாயில்லாதிருப்பதற்காக நாம் மிகவும் துதிசொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். சிறபிள்ளைக் கலியாணமானது நம்நாட்டிற் கிஞ்சித்தேனும் இல்லையென்போம். அறியா வயதிற் தாலியிழந்த புருஷனென்பது என்னவெனத் தெரியாத அரைவயது, ஒருவயது, இரண்டு வயது, பத்துவயதுப் பாலகிகளான விதவைகள் நம்நாட்டிலே இல்லாதிருப்பது தெய்வம் செய்த பெரியதோர் பேருபகாரம். இந்தப் பேருபகாரம். இந்தப் பெண் கொடுமையும் நம் நாட்டிற் சாதிப் பேய்க்குப் பக்கத் துணையாயிருந்திடில் யாழ்ப்பாண அனாகரீகம் மிகப் பெலத்ததாகவே யிருந்திருக்கும்.

சாதிக் கொடுமையும் பெண்கள் நிர்ப்பந்தமும் பிறந்த இடம் ஒன்று. சாதி ஸ்தாபகர் அந்த நாட்களிலே தம்மூடத்தனத்தின் இரண்டாம்படியாக பெண்கள் வதையையும் ஆக்கிவைத்து அவைகளைத் தெய்வத்தோடும் மார்க்கத்தோடும் சேர்த்துப்பிணைத்துவிட்டார். இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர் பெண்கள் விஷயமாய் இலங்கைவாசிகளான தமிழரல்லாத வன்மை பெற்றவரின் பழக்கத்தைப் பின்பற்றினரென்போம் ஆனாலும் பெண்களைப் புறத்திலேயே ஒதுக்கி மூடிவைக்கும் வினோத பழக்கம் புறதேச ஆட்சியார் காலத்திற் கூடவேயிருந்த தென்பது அரசாட்சிப் பிரதான உத்தியோகஸ்தனை பூதத்தம்பி பெண்ணின் பாதம்மட்டுமே தெரிந்ததெனுஞ் சரித்திரத்தாற் காணலாம்.

சுயராட்சிய விருப்பம் நம் இலங்கையையும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள தமிழரின் குடிசையான யாழ்ப்பாணத்தையும் பற்றிக்கொண்டது வியப்பல்ல. ஆனால் காலையுங் கையையும் இரும்புவிலங்கிட்டுக் கட்டிவைத்துக்கொண்டு எழுந்து நடக்க ஆசைப்பட்டவன்போல நம் யாழ்ப்பாணிகளும். ஆசைப்படுவதாகவே நாம் கூறுவோம் இதினாலேதான் சாதிக்கட்டுப்பாடு விலங்கென்று மகாத்துமா கூறுகிறார். சாதிக்கட்டுப்பாடென்பது முட்டாள்த்தனமானதும் வம்புத்தனமும் அறிவீனமும் நிறைந்த தென்பது உயிருடைய மனுஷர் மறுக்கொணு முடிபு.

தங்கள் சமூகத்தாரென்றும், தங்கள் சகோதரரென்றும் சீவகாருண்யமென்றும் ஓரேபிரத்தமென்றும் எண்ணாமல் தமது சொந்த உடன் பிறந்தோரான நாட்டுமக்களுக்கு சுதந்தரமளிக்காமலும் மனுஷர்களென்றுகூடக்கருதாமலும் அடிமைப்படுத்திக்கொடுமைப்படுத்தி, இழிவுபடுத்தித் தாழ்த்திவைத்திருக்கும்மக்களிடம் அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களையோ அவர்கள்தேடும் விடுதலையையோ ஒப்படைப்பதென்றால் அது ஓனாய்களிடம் அல்லது இறைச்சிக்காரனிடம் ஆட்டுப்பிள்ளைகளை ஒப்படைப்பதுபோலாகுமல்லவா?

இதையுணராமல் ஓனாய்களின் உள்எண்ணத்தையறிந்தும் அறியாதவர்கள்போல சிலமக்கள் தமக்குத் தமது நாயன்மார் செய்துவருந் தீங்குள்ள சூட்சியை மறந்தவர்போல மதமென்றும், பாடசாலையென்றும் கோயிலென்றும் ஆடல் பாடலென்றும் ஆரவாரமென்றும் சொல்லிக்கொண்டு நீர்க்குமிழிக்கொப்பான காட்சிகளுள் மயங்கி அவர்கள் பின்னேசென்று பட்சியானது கருநாகத்தின வாயுட்தானே மயங்கிப்பறந்து பட்சணமாவதுபோல மாண்டுபோகின்றார்.

தீண்டாமையெனும் விஷயத்திலிருக்குங் கொடுமையும் மூடத்தனமும் மூர்க்கத்தனமும் யோசித்துப்பார்த்தால் அதை மன்னிக்கவோ அலட்சியமாய்க்கருதவோ நாளைக்குப்பார்த்துக்கொள்ளலாம் அதற்கு இப்போது என்ன அவசரமென்று காலந்தள்ளவோ எல்லாம்படிப்படியாய்க் காலக்கிரமத்தில் வாட்டுமென்று சொல்லவோ சிறிதும் மனம் இடந்தரவேதராது.

பிறரைத் தீண்டாதாரெனக் கஷ்டப்படுத்துபவர் இக்கஷ்டத்தைத்தாமேயடைந்தால் மட்டும் அதைப்பற்றிச் சரியாய் உணர்வார்களேயொழிய மற்றப்படியவர்கள் உணரமாட்டார். இப்போது ஆங்கில அரசு செய்யுங் காரியங்களைக் கொடுமை யென்றுசும்மா இடைவிடாது சொல்லுகிறவர்களுக்குச் சிறிதாவது சுதந்தரமுஞ் சமத்துவமுங் கொடாததும் கடுமையான அநீதி செலுத்துவதுமான கொடுங்கோல் அரசாட்சியிருந்தாற்றான் சாதிக்கொடுமை செய்யாது மனுநீதி செய்யக்கூடிய உணர்ச்சிவந்து புத்தியடைவரென்று தோன்றுகிறது,

ஆனால் யாழ்ப்பாண நாட்டவர் முன்னேறி இவ்வளவு சீர்பெற்றிருந்தாலும் மூர்க்கத்தனமும் சுயநயமும் வன்கண்மையும் மட்டுமல்ல மூடத்தனமும் சேர்ந்து கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதால் உண்மையான கஷ்டத்தை உணரவருவது அசாத்தியம். என்றாலும் இந்நிலைமாறுதல் உண்டுபண்ணத்தக்க நம்பிக்கைகொள்ள இடமிருக்கிறதையிட்டுச் சந்தோஷப்படுகிறோம்.


## விளம்பரம்

### முதிரை! முதிரை!!

இரண்டடி தொடக்கம் நாலடிவரை சுற்றளவுள்ளதும் 5 அடிக்குமேல் 10 அடிவரை நீளமுள்ளதுமான சிறு முதிரைமரங்கள் விலைக்கிருக்கின்றன.

எனது வேலைச்சாய்ப்பிற் பார்க்கலாம்.

யோவேல் போல்,
தெல்லிப்பழை.


### சுயராச்சியமுதற்படி குளப்படிதான்

#### கிராமச்சங்கமும் சாதியும்

எங்கள் 5ம் இலக்கப்பிரதியில் இந்தவிஷயமாய் நாமெழுதியதையிட்டு அபிப்பிராய பேதங்களுண்டானது துக்கம். இல்லாத அல்லது பிழையான அவதூறான செய்திகளை நாம் எழுதவேயில்லை. தனியே வேளாளர் மட்டும் மறுசாதியாரை ஆளும்படி கிராமச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன வென எண்ணுகிறவர்களும் பேசுகிறவர்களுமானோர் நாம் தமது பக்கமெனவெண்ணியது எமக்குத்துக்கம். வேளாளரல்லாதோர் தம்மைச் சங்கத்துக்கு வாராதபடி நாம் வேலைசெய்கிறோமென மாறுபாடாய் நினைத்ததும் அதினாலே எம்மிற் குரோதங்கொண்டதும் எமக்குத்துக்கம்.

சென்ற 8ம் திகதி மறுபடியும் தெரிவு நடந்தது. அதில் வேளாளரல்லாதோர் சேர்ந்த அந்தப்பகுதியே வெற்றியடைந்தது எமக்கு அடங்கொணுமகிழ்ச்சி. அதனினும்பார்க்க வேளாளரல்லாதோர் சேரப்படாதென நின்றவர் பக்கம் குறைந்தது மிகவும் மகிழ்ச்சியென்போம். ஏனென்றால் கிராமச்சங்கம் வேளாள ஆளுகை யெனும் எண்ணம் எரிக்கப்படவேண்டியது. இதையெழுதுவதால் எம்மிற் குறைகூறுவோர் மிகலாம். ஆயின் கிராம ஆளுகைச்சங்கம் ஒருவருக்குச் சீதனமுமல்ல! முதுசொமுமல்ல. அதுவேளாளருக்காவது மற்றெவருக்காவது ஆதீனமுடையதல்ல. அது வேளாள ஆளுகைச்சங்கமல்ல.

இன்னும் ஒன்று உண்மை. அதாவது கிராமச் சங்க அங்கத்தவர் வேளாளராயினுமென் அவரல்லாத மற்றெந்தச் சாதியாயினுமென் சாதிபேத ஸ்தாபனஞ் செய்து எழியவரென ஒருவரை யொதுக்கி ஒடுக்கி நடத்தவிரும்புவரேல் அவர் எவராயினும் கிராமச்சங்க அங்கத்தவராயிருக்க உரிமையற்றவர். அப்படியான பிழை செய்கிறவர்களை சரிசெய்யும்படி நாம் தெரிந்தெடுக்கலாகாது. தெல்லிப்பழையில் மட்டுமல்ல எந்தக்கிராமத்திலும் கிராமச்சங்கம் நீதி செய்யுஞ் சங்கமோ? நடுநிலைமையுடையதோ? தராசுபோல உள்ளதோ என்பதேகவனிக்கப்படவேண்டியது. இந்தஉண்மையும் நேர்மையும் இல்லாத சங்கம் அழியும். அது அநீதிநிறைந்த சங்கமாகும். இதினாலேயே நாம் இவ்விஷயத்தை யெடுத்து எழுதினோமன்றி சங்க தெரிவுக்கு வரும் எவருக்காகவாவது பாரபட்சங்காட்டி எழுதினோமல்ல. கிராமச் சங்கங்களிலே தலைவர்மாரின் பெருந்தன்மை துலங்கவேண்டியதே வேண்டியது.

மறுபடியும் பலமுறை இந்தக் கந்தாயத் தெரிவு நடக்கும். ஏனெனில் இரண்டாந்தெரிவும் பிழையாய்முடிந்திருக்கிறது. மூன்றாம்முறை தெரியவேண்டிய காலம் இரண்டொருமாதத்துள் மீளவரும். ஆனால் அந்தத் தெரிவும் ஒரு காட்சியாரால் பிழையென்றே வாதிடப்படும். இப்படியே தெல்லிப்பழைக்கிராமச்சங்கத்தின் தொந்தரவு சாதிபேதஸ்தாபனத்துக்கு ஒரு எல்லைகட்டாமல்விடாது. நன்மையும் நீதியும் இவ்விடமிருந்தேமற்ற இடங்களுக்குப் பரவ இதுவுமோர் வழியாகும். சுயராட்சியத்தின்முதற்படி குளப்படியாயேயிருக்கிறது. வேளாளர் தமக்கு நீதியீனம் செய்வதாய் நினைத்துக்கொண்டிருப்பவர் தம்மினுங்குறைந்தவரான சில்லறைச்சாதிகளுக்குத் தாம் நீதியீனஞ் செய்கிறோமோ செய்யததொடங்குகிறோமோ என்றதையோசிக்கவேண்டுமென்பதே யெமது விருப்பம். இவர்கள் நீதிசெய்யவல்ல நீதியீனஞ் செய்யவே சங்கப்பிரவேசம் ஆரம்பிக்கின் சகலமும் வழுக்கலாகும். ஏனெனில் தெய்வதுரோகமான சாதியாசாரஸ்தாபனமெனும் மனுஷகொலை தெய்வத்தால்மன்னிக்கப்படாதபிழை யென்பதை நாம் இங்கேயும் சுட்டிக்காட்டுகிறோம்.

வேளாளர் ஆழுகையுமல்ல வேளாளரல்லாத ஆழுகையுமல்லக் கிராமச்சங்கம். வேளாளர் மற்றவரை ஆழுகைசெய்ய ஆசைப்பட்டதுபோலவே வேளாளரல்லாதாரும் மற்றவரைஆழுகைசெய்ய ஆசிப்பதைக்கவனமேர்து எசண்டரான துரைமகன் விளங்கிக்கொள்ளும்போது "நீதி" யெனும் ஆங்கிலவாசு சிலசாதிகளை ஆழுகை செய்யும்படி புதிய உபாசாங்கத்தை வேளாளராதிய சிலசாதிகளின் கையிற்கொடுக்கவேமாட்டாது.


## விளம்பரம்

### குடைமார்க்கு ஓடுகள்

பெலமானதும், குளிர்ச்சியானதும் கவர்ண்மேந்து இஞ்சினியர் மாரிலே நல்ல திறமென்று ஒப்புக்கொள்ளப்பட்டதுமான ஓடுகள் ஹெங்கிஸ் ஓடுகளென்று சொல்லப்பட்ட ஓடுகள் இப்போ மட்டூருக்கம் பனியாராலே அதேஇடத்திற் செய்யப்படுகின்றன. பொன் விரு முத்திரை பெற்றவை ஓட்டுப்பரி சோதகரினலே முதற்தரமானவைகளென்று ஒப்புக் கொள்ளப்பட்டவை பாரங்குறைந்தவை மலிவானவை. கசிவாவது ஒழுக்காவது இலலாத ஓடுகள் மற்ற ஓடுகள் 100 பாவிக்குமிடத்துக்கு இந்த ஓடுகள் 90 போதியன. சிலாகையும் 100க்கு 10 லாபம் வந்துபார்த்து சோதித்து திருப்தி அடையலாம்.

J. Cherubim & Brother,
Main Street
Jaffna

ஜே. செருபீம் கொம்பனி.
பெரியதெரு.
யாழ்ப்பாணம்.


### பஞ்சம் எட்டிப்பார்க்கிறது

உலகிலுள்ள வியாபார நஷ்டம் சகலரையும் தாக்கி விட்டது. றப்பர் விலைக்குறைவும், தேங்காய் மலிவும் பிறதேசத்தனிகள் மறுசாமான்களின் இறக்குமதி ஏற்றுமதிக்குறைவும் வியாபாரக்கம்பனிகளிற்கடித்தது. இதினாலே வியாபாரிகளும் தோட்டக்காரரும் எசமான்களுமானோர்பாடு திண்டாட்டமானது— லங்காஷீயர், மான்செஸ்தர் எனும் சீர்மைவியாபாரதொழிற்சாலைகளின் உறைவிடமான செல்வநீரூற்றுகள் வறண்டன, அரசிறைப்பொக்கிஷசாலையிற் பிச்சையெனும் பசாசும் வறுமையெனும் கொடியோனும் புகுந்து திறைசேரிப்பணப்பெட்டியுள் வெறுமைக்கோலத்துடன் உட்கார்ந்துகொண்டார்.

"வரப்புயர" என்பதுபழமொழி. அதாவது வரம்புயர நீருயரும் நீருயரநெல்லுயரும் நெல்லுயரக்குடிஉயரும் குடிஉயர அரசகோன் உயர்வான் என்பதாம். குடியயரக் கோனயர்வான். குடியுயர்வதற்குப் பதிலாய் அயரவேண்டிவந்தது. இதால் சகல அயர்ச்சிகளுமுண்டாயின.

நவீனகல்வியால் அறிவுமில்லை தொழில் செய்யக் கமம் செய்ய வெட்கமாய் விட்டது. உத்தியோகப்பெருமையும் சாதிமாப்புப்பெருமையும் பணப்பெருமையும் வெட்கமுண்டாக்கும் ஏதுக்களாயின. அரசாட்சியின் உத்தியோகத்துக்கு விலையில்லை. படித்தவாலிபர் வெள்ளைச் சுருட்டும் வெண்பட்டு வஸ்திரமும் கறுத்தச் சிவத்தத்தண்ணீர்ப்பருகலும், தெருநீளம் நையாண்டியும் சொட்டையும் பெரிதெனக்கொண்டு அப்பன்வீட்டுச் சொத்தையும் தான் கொண்டாளின் சீதனச்சொத்தையும் நாள்வீதம் வீண்செலவு செய்து ஏமாந்துகொண்டார்.

உத்தியோகம் தோட்டம் இவைகளால் மலாயா சிங்கப்பூர் நாட்டிலிருந்துவந்தபணங்கள் வற்றின. அந்த ஆறு இப்போமணற்காடாய்விட்டது. அங்கிருந்து திரும்பிவா வழியின்றி வெட்கப்படுவோருண்டென்பதும் ஊர்க்கதை. ஊள்ளூரின் உத்தியோகஸ்தரில் நிலையான சேவையற்றோரை அரசாட்சியார் நிறுத்திக்கொண்டார். தபாற்பகுதியில் ஞாயிறின் வேலைக்குறைத்ததும் பணக்கஷ்டத்தினாலேயே.

இப்படியே ஊரிற்பணநிலை தட்டுப்பட பெரியவர்கள் தமது செலவைக்குறைக்க அன்றன்று சீவனஞ் செய்யக் கையடிப்போரின் வயிற்றிலும் அடியாயிற்று. தற்போதைய நெல்விளைவும் தானியவிலையிறக்கமும் சற்றே திடனைக் கொடுப்பதாலேயன்றி மற்றப்படி பஞ்சத்தின் விரைவு இந்தமட்டில் அதையிங்கே சேர்த்திருக்கக் கூடியதாகும். வீண் செலவு செய்யும் பழக்கமும், பிறதேச உடைகளையும் உயர்தர வஸ்திரங்களையும் உடுத்தும் பழக்கமும், டாம்பீக செலவுகளும், வரவுக்கு மிஞ்சச் செலவு செய்யும் யோசனையற்ற நடபடியும், இப்படியான நிலையில் நம்மை யமிழ்த்தி விட்டன. ஆகவே நம்நாட்டவர் சாதாரண சாப்பாடும் இயற்கையோடொத்த புனித சீவியமும் செய்தால்மட்டும் வறுமைப்பிணியை தூரத்துரத்தலாம்.

இதைவிடபழைய சனுக்கண்டு ஆங்கில ஆளுகை, உயர்தர உத்தியோகஸ்தர் கொடுமை, அரசாட்சியிற் தேசாதிபதியவர்களுக்குரிய அதிகார உரிமை, மந்திராலோசனைச் சபையாரின் மடமை யென்று இப்படியான வீண்குதர்க்கங்களை அநியாயம்இந்தியாவமெனச் சொல்லிக்கொண்டு விசையை முறுக்குவது விழலாகும். பனாட்டு, பனங்காய், கூழ், சாமை, வாகு, குரக்கன், மரவள்ளிக்கிழங்கு இவைகளை விடும்படியாவது சிரட்டை, அகப்பை, சட்டி, பனைமுறி இவைகளை வீசியெறியும்படியாவது, வேப்பங்கொட்டை, வேப்பெண்ணை, ஓலைப்பாய் இவைகளைக்கையினாலே தொடவேண்டாமென்றாவது அரசாட்சியார் சொல்லவேயில்லை.

# மானிப்பாய் வைத்தியசாலை டக்றர்

## யேம்சன் அவர்கள்

தற்போதுள்ள அமெரிக்கன் மிஷன் மானிப்பாய் கிறீன் ஞாபக வைத்தியசாலை யாழ்ப்பாணம் இலங்கையில் முதல் நிரையிலுள்ளதெனல் மிகையாகாது. டக்டர் யேம்சன்துரை இங்கே யனுப்பப்பட்டதும், அவரின் சாதுரியமும் விடாமுயற்சியும் வைத்தியத்திறமையும் மானிப்பாய் ஆஸ்பத்திரியை முதல் நிரைக்கு உயர்த்தியது. நாள்வீதம் எண்ணில்லாத சனங்கள் நிராதவியா மிஸ்தர் யேம்சன் ஐயரின் கைபட்டாலேபோதுமென அவரின் வைத்தியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதேயவரின் வைத்திய திறமைக்குச் சாட்சி. இரண்டுவருடங்களின்முன் இருபாரிய கட்டிடங்கள் முடிந்தன. மறுபடி கடந்த 2 வருடங்களிலும் வைத்தியர்கட்கு வீடுகள், தண்ணீர்ப்பப்பு, மின்சாரவெளிச்சம், குளிர் வசதிகள் செய்யப்பட்டதுடன் மிகப்பிரமாண்டமானதும் விசேஷவசதிகள் அமைத்ததுமான பெரியவோர் மேல்வீட்டுக்கட்டிடம் முடிக்கப்பட்டு சென்ற 3ந் திகதி இலங்கைக்கவர்ணர் பெருமானாற்றிறந்து விடப்பட்டது.

வியாதியிற் சாதியில்லை யென்பதும் சாதியிலும்பார்க்க வியாதிகொடியதென்பதும் இவராலே நன்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதை இங்கே சொல்லாமல் விடமுடியாது. சாதிவித்தியாசம் காட்டுவதினலே அநேகரை இழுத்துக்கொள்ளலாமெனும் எண்ணமுடைய மற்ற ஆஸ்பத்திரியைகளினம் பண்ணும்படி சாதிவித்தியாசங்காட்டுவதே ஆஸ்பத்திரிக்குக்கேடென்பதை காட்டி வைத்திருக்கின்றார் டக்றர் யேம்சன் அவர்கள்.

சென்ற பதினேழாந்திகதி யேம்சன் ஐயர் திரள் சனங்களால மேளவாத்தியங்களுடனும் மகாசன்மானத்துடனும் சுன்னாகம்ஸ்டேசனில் வழிவிட்டனுப்பப்பட்டார். இவர் திரும்பிவருமட்டும் இவர் இலங்கையில் இல்லாமை இலங்கைக்கோர் துர் அதிஷ்டமென்போம். (கடிதம்)

## சமபோசன விமோசனம் நன்று?

நமது இலங்கைத் தீவானது ஆதியிற் சிங்களவர்களாலுந் தமிழர்களாலும் பின்முறையே போர்த்துக்கீசர் ஒல்லாந்தர்களாலும் அடிப்படுத்தப்பட்டு, இப்போது நீதிவழுவாத அங்கிலேயர்களால் ஆளப்பட்டு வருகிறது. முன்னையோர்களது ஆளுகையிலும் பின்னையோர்களாகிய ஆங்கிலேயர்களின் ஆளுகையே சாலச்சிறப்புடையதென்று இலங்கை இதிகாசங்களும் புதினப்பத்திரிகைகளும் போற்றி வருவதுடன் அறிவிற் கூடியவர்களுங் குறைந்தவர்களும் புகழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் தற்போது ஆங்கிலேயர்களின் ஆட்சி அநீதியென்று யாழ்ப்பாணத தமிழரில் உயர்ந்தோரென்று சொல்லுபவரிற் பலரும், தாழ்ந்தோரென்று சொல்லுபவரிற் சிலருங் குறை கூறி வருகிறார்கள். இவர்களிப்படிக் குறை கூறுவதற்கு ஏதோ பல நியாயங்களிருக்கவேண்டும். தற்போது நம் நாட்டில் கிளத்தப்படும் சமாசன சமபோசன விஷயங்களுஞ் சாதிவித்தியாசமின்றிச் சட்ட சபையில் அங்கத்தினர்ப் பங்கு பெறலாம் என்னும் பிரமாணமுமாகிய விவைகளே மேற்படியாரின் குளப்பங்களுக்கடிப்படையாகும். பொதுவாகக் கூறின், பிரசைகள் யாவருக்குஞ் சமவுரித்துக் கொடுக்கப்படவேண்டு மென்னுங் கருத்தை யரசினர் கருதியதே முக்கிய காரணமென்று நினைக்கக் கிடக்கின்றது.

பாடசாலை மேலதிகாரிகள் சமாசனத்தைச் சிலவிடங்களிற் கொடுத்துஞ் சிலவிடங்களிற் பிள்ளைகளைப் பாடசாலையினின்றுங் கலைத்துஞ் சிலவிடங்களில் ஊரவர்களுக்குக் கொடாதது போலவும் அரசினருக்குக் கொடுத்தது போலவும் நடித்துஞ் சிலவிடங்களில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களைப் பலவிதமாய் நெருக்கி அவர்களைக் கொண்டு சமாசனத்திற்கு விருப்பமில்லையென்று அரசாட்சியாருக்கு அறிவிப்பித்து அரசினரைச் சமாதானப்படுத்தியும் வருகிறார்கள். இவ்விதமாகச் சமாசன விஷயம் இப்போது கரை துறை காணாது கலங்கித் திரிந்து தத்தளிக்குங் கப்பலைப்போல நின்று தவிக்கின்றது. இது இவ்வளவில் நிற்க;

சம போசன விஷயம் என்ன நிலைபரத்திலிருக்கிறதென்று பார்ப்போம். 1929ம் ஆண்டு சமபோசனம் வைக்கப்பட வேண்டும் என்று அரசாட்சியார் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டனர். ஆனால் அவ்வாண்டில் சுய நலங்கருதிய பெரியோர்களின் செயலாலும், ஒதுக்கிவைக்கப்பட்டுக் கஷ்டப்படுவோரின் பிள்ளைகள் சித்தியடையாமையாலும் அரசாட்சியாரின் எண்ணம் நிறைவேறவில்லை. இவ்வாண்டிலோவெனில் தேவரையாளிச் சைவவித்தியாசாலை யாசிரியரும் மள்ளர் குலத்துதித்தவருமான ஸ்ரீமான் சி. வல்லிபுரம் என்பவர் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சையிற் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரொருவருடன் உயர்ந்தோரென்று மதித்துக் கொள்ளும் மிகுதியான ஆசிரிய மாணவர்கள் சாப்பிடுவதற்கு விருப்புறுமல் விடுதியைத் தங்கள் செலவில் பாடசாலைக்கு வெளியே வைத்திருக்கிறார்கள். ஒருவர் பொருட்டு மற்றவர்கள் வெளியே விடுதியை வைத்துத் தங்கள் செலவைச் செய்வதிலும் பார்க்க, இவரொருவர் விடுதியை வெளியே வைத்துக்கொண்டு தஞ் செலவைச் செய்வது நல்லதென்று சிலபகுதியார் யோசிக்க இடமுண்டு.

இப்படி யோசிப்பவர்களைப் பரோபகார சிந்தையுடையவர் களென்றே சொல்ல வேண்டும். ஆனால் இவ்வருடத்திற் பலரின் நன்மையைக் கருதினாலும் பிற்காலங்களிற் தாழ்ந்தோரென்று ஒதுக்கிவைக்கப்பட்டவர்களைப் படிக்க முடியாதபடி செய்பவர்களாவார்கள். எப்படியெனில் முன்கூறிய விவ்வொருவரைத் தஞ் சுய செலவில் கற்கக்கூடிய பொருளுடையவரென்று வைத்துக் கொண்டால் தஞ் சொந்தப்பணத்தில் கற்க முடியாதவர்கள் அதிக கஷ்ட நிலையடைய நேரிடும். இதுவுமன்றி யரசாட்சியார் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சேர்ந்து படிப்பதற்குரிய வசதிகளைச்செய்த சலாக்கியத்தை இழந்து விடவும் வரும். இவ்விதமான தீமைகளுக்கிடங்கோலிக் கொளவது அதமாதமமாகும்.

சமபோசனம் என்றால் என்ன என்பதை யாராய்ந்தால் சம அளவான போசனம் என்றுஞ் சமமாக இருந்து போசனஞ் செய்தல் என்றுங் கருத்துக் கொள்ளப்படும்.. அரசாட்சியார் கருதியதும் சமாசன சமபோசனம் என்பதே. சமாசன போசனம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மாத்திரமா அல்லது வேறிடங்களிலும் நடைபெறுகிறதாவென்று பார்த்தால் தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, உடுவில் முதலிய விடுதிப் பாடசாலைகளிலுஞ் சிறைச்சாலைகளிலும் கமஞ் செய்யுமிடங்களிலும் நடைபெற்று வருகிறது. எத்தனையோ வருடங்களுக்கு முன் நடைபெற்று வந்த சமாசன சமபோசனம் என்பவைகளை அங்கிலேயர் உண்டாக்கியிருக்கின்றனர் என்று மனம் புழுங்கி இவ்விஷயங்களை விமோசனமாக்குதல் வேண்டுமென்று உயர்ந்தோரென்று சொல்லப்படுபவர்களிற் சைவ சமயத்தை யனுஷ்டிக்கும் பெரியாருட் பலருந் தாழ்ந்தோரென்று சொல்லப்படுபவர்களிற் சைவசமயத்தை யனுஷ்டிப்பவர்களிற் சிறியாரிற் சிலரும் ஓயாது முறுகித் தவஞ் செய்து ஏற்ற காரியங்களைச் செய்துகொள்ள முயறசிக்கிறார்கள். இவர்கள் சமாசன சமபோசனஞ் சைவ சமயத்திற்கு விரோதமாகும் என்றும் இது காலவரையும் வளக்கமில்லை யென்றும் பற்பல போலிச் சாட்டுகளைக் கூறுகின்றனர். இவர்களின் போலிச்சாட்டுகள் சைவசமயத்திற்கு முற்றும் மாறானவை யென்று பின்வரும் நியாயங்கள் புலப்படுத்தும். தாழ்ந்தோரென்று சொல்லப்படுபவர்களுள் ஒருவர் சிவனடியார் வேடம் பூண்டு கொண்டு, சைவசமயத்தையனுஷ்டிப்பவர்களில் உயர்ந்தோரென்று சொல்லப்படுபவர்களின் இல்லத்திற்குச் சென்றால், இச்சிவனடியாருக்கு உபகாரஞ் செய்ய வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்னுங் கேள்வியை வினவிப் பார்த்தால்; எச்சாதியானாயினுஞ் சிவபெருமானின் திருவடியை வணங்குவானாயின் அவ்வடியானைச் சிவபெருமானென மதித்துச் செய்ய வேண்டிய உபசாரங்கள் யாவற்றையுங் குறைவுறாது செய்யவேண்டும் என்னும் மறுமொழி கிடைக்கும். ஆகவே சமாசன சமபோசனஞ் சைவ சமயத்திற்கு மாறானதல்ல என்பதை இக்காரணம் ஒன்றுமே வெளிப்படுத்துகிறது.

சமாசனசமபோசனம் வளக்கமில்லையோவென்றால் முன்னாட்டொட்டு இன்னாள் வரைக்கும் கமச்செய்கை யிடங்களில் உயர்ந்தோருந் தாழ்ந்தோரும் என்று சொல்லப்படுபவர்கள் சமாசனமாயிருந்து சமபோசனம் புரிந்து கொண்டு வருவதனாலும், புகையிரதம் ஓடத் தொடங்கிய காலந் தொடக்கம் இன்னாள் வரைக்கும் சமாசன சமபோசனம் நிகழ்ந்து கொண்டு வருவதனாலும், வைத்திய சாலை சிறைச்சாலை முதலிய விடங்களில் யாதொரு வித்தியாசமின்றித் தாராளமாய்ச் சமாசன சமபோசனங் குறைவின்றி நிறைவேறி வருவதனாலும், வளக்கமுடைத்தென்று புலப்படும்.

முன் கூறியவைகளினாற் சமாசன சமபோசனஞ் சைவ சமயத்திற்கு மாறானவையுல்ல வென்றும் வளக்கம் என்றும் வெளிப்படுகின்றது.

ஆகவே சமபோசனத்தை விமோசனமாக்குதல் நன்று வென்னும் வினாவை வினாவினால் தீமை யென்னும் விடை வெளிப்படும். எப்படியெனில் முற் கூறிய நியாயங்களினால் சைவ சமயத்தின் முக்கிய அம்சத்திற்கு விரோதமாவதினாலும், இது காறும் வளக்கமாய் நிகழ்ந்து கொண்ட வைத்தியசாலைகளில் சில வேளை குளப்பம் ஏற்படக் கூடியதாயிருத்தலாலும், முன் கூறிய சி. வல்லிபுரம் என்பவர் இப்போது பிறவிடுதியிற் சாப்பிட நேரிட்டால் இனிமேல் தாழ்ந்தோரென்று சொல்லப்படுபவர்களுக்குக் கஷ்டத்தையும் அதிக செலவையு முண்டாக்குவதாதலாலும், அரசாட்சியார் செய்த சலாக்கியத்தினின்றும் நீங்க நேரிடுவதாதலாலும், சமபோசனம் நீங்கவே சமாசனமும் நீங்கும் என்னும் அபிப்பிராயந் தோன்றுவதினாலும், சமபோசன விமோசனம் (சமபோசன நீக்கம்) தீமையென்று வெளிப்படும்.

ஆகையால் அறிவிற் சிறந்த பெரியோர்களே! முற் கூறிய தீமைகள் நேரிடா வண்ணம் பாதுகாப்பதுடன் அறிவிற் குறைந்த இத்தாழ்ந்தோரென்று சொல்லப்படுமிச்சாதியார் முன்னேறி வருவதற்குரிய செயல்களைச் செய்து கடவுளின் திருச் சமுகத்தையடைவதற் குதவி புரிந்து "சாதியிரண்டொழிய வேறில்லை" என்று கூறிப் போந்த ஒளவைப் பிராட்டியாரின் திருவாக்கை மேற்கொண்டொழுகுமாறு வேண்டுகின்றேன்.

மேல்வதிரி இங்ஙனம்
20-11-30 த. இரத்தினம்.

## நாவலரும் சைவவினாவிடையும்

நாவலர் என நவிலுங்காலிவர் எவரென தெள்ளிதில் உணரலாம். யாழ்ப்பான வாசியும், செந்தமிழ்ப்புலவரும், உயிர் இரக்கம் ஒவ்வொருவரிடத்தும் இன்றியமையாதிருக்க வேண்டியதெனக் கண்டவரும், பல தமிழ் நூற்களைப்பழுதறப்பதித்தாரும் சமய வழக்கிட்டு சைவசமயத்தைசிறப்பித்தாரும், விவிலிய நூலை விளங்கியவரும், இன்னோரன்ன பல நற்றொண்டியற்றிய பாவலருமாகிய "ஆறுமுக நாவலர்,, ஆவர். இன்னாரைப் பற்றி யீண்டுவரை நேர்ந்ததென்! இத்துணைச் சிறப்பு வாய்ந்த இன்னார் இயற்றிய சில வினாக்களும் விடைகளுமே ஏதுக்கள் ஆகும்.

சுயமரியாதையும, தனிச்சிறப்பும், தவவொழுக்கமும் ததும்பிய தமிழ் நாட்டில் வள்ளுவர் வாய்மொழி வழங்கும் தமிழ் நாட்டில்- அள்ளும் சிலப் பதிகாரம் என், றோர் மணி ஆரம்படைத்த தமிழ்நாட்டில்- அடிமைத்தனமும், அவமதிப்பும், காவொழுக்கமும், தனித்தமிழ் இல்லாமல் போதற்கு காரணமும் தோன்ற ஏதுவாயிருந்தார்களில் இவர் ஒருவரென்பது வெள்ளிடைமலை யென விளங்கும்; எங்ஙன மெனின் இவரியற்றியசைவ வினாவிடையில் யாண்டும் இன்னிசை நிரம்பிய பாலே. முத்துமுத்தமிழ் மொழிகளோடு ஆரிய ஆக்கையை அல்லல் படுத்தும் ஆரிய மொழிகள் அளவிறந்து கிடப்பனவாயின. விளக்கமாக வேதாகம இயலில் 'ஏன்? ஒவ்வொரு இயலிலும் ஒவ்வொருவரியும் வடமொழி நிறைந்து கிடக்கின்றன. இவற்றிற்கான இயல் தமிழ் மொழிகள் இவருக்கு இல்லாதொழிந்தனவா? இல்லை, தன்னில்லக் கிழத்தியோடு ஆங்கிலம் பேசின் அழகாமெனவும், யாழினுமினியகுதலையரின் இன்பம் பகுக்குமெனவும் ஏங்கும் புது இழி நாகரீக புதுமனிதர் கொள்ளும் பொய் மயக்கம் போன்ற பபன்படாதிறந்தொழிந்த பார்ப்பன மொழியின் மேல் கொண்ட கெடுங்காதலே எணக்கருதுகின்றேன்

இத்தகைய பெரியார் கொண்ட மயக்கந்தானே எல்லோரும் கொள்ளுவர். இவ்வாறே உயர் தனித்தமிழ் மொழிகள் பல மறைந்து வடசொல் பல வந்துள. இவரே இவ்வாறாயின் ஏனையோர் என்னுவர். இவரது தமிழ்க்காதல், தீண்டாமை கூறவந்த திருவன் காந்தி எளியோரை, பல உயர்ந்தோரை காணுமைக் கொண்ட காதலை ஒக்குமன்றோ! (வரும்)

## விசேஷமுன் அறிவித்தல்

அனேகர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் "கருங்குயில் குன்றத்துக்கொலை' அல்லது அலமுகன்னிகா ரத்தினத்தின், அற்புதச்சரித்திரம் என்னும் அபூர்வ சரித்திர நடனம் வருகிற நத்தார்த்தினத்தன்று சுன்னாகம் அர்சு. அல்வநேற் ஆங்கிலகாலசாலை மாணவரால் நடிக்கப்படும்.

V. Aseervatham,
Chunnakam.

## விசேஷ அறிவிப்பு

யாழ்ப்பாணம் ஒடுக்கப்படுந் தமிழரின் ஊழியசங்கம்.

The Jaffna Depressed Tamils Service League

எங்கள் சங்கத்தின் 3வது வருடாந்தக் கூட்டம் மார்கழிமாசம்(டிசெம்பர்) 13ம் திகதி சனிக்கிழமை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு சுன்னாகம் ஆங்கிலபாடசாலை மண்டபத்தில் நடக்கும். சங்கத்தைச்சேர்ந்தவர்களும் அதையாதரிப்பவர்களுமான கனவான்கள் தவறாது சமுகந்தரும்படி அன்பாய் அழைக்கப்படுகிறார்கள்.

இங்ஙனம்.
லிகிதர்.


## விளம்பரம்

காய்கறிகள்

தாபரபோசனிகளான சைவசமயிகளும் ருசியான போசனம் விரும்பும் மற்றவர்களும் கண்டி நுவரெலியா மலைநாட்டுக்காய்கறிகள் ஒவ்வொரு சனியும் ஞாயிறும் புதிதாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். தயவு செய்து முந்தியே ஓடர் செய்யவும் யாழ்ப்பாணக்காய் கறிகளிலும் பார்க்க மலிவு. வந்துபாருங்கள்.

எஸ். எம். ஒலிவர் & கம்பனி.
முதலாங்குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்

## UMBRELLA BRAND TILE

Undoubtedly the best in the marktt
Largely patronised by
Government Engineers.
World famed "Henke's" Tiles now Manufactured by Madura Co., Ltd.
Give the best protection from Sun-Rain Fire.
Have stoode thetst of Experts, Winning 1
Gold Medals and declared best,
Special Features: Lightest, Cheapese and non-Dripping Tiles.
Glass tiles give best interior illumination Owing to larger surface reduces cost of tilling by 10 per cent.
Come—See—Test and satisfy yourself.

**J. Cherubim & Brother,**
**Sole Agents**
Main Street, Jaffna.

## NOTICE

A VALUABLE CHANCE TO JAFFNA.

All kinds of Fresh up-country vegitables available on Saturdays and Sundays. Book your order early.

**S. M. Oliver & Co.**
1st Cross Street.
Jaffna.

## விளம்பரம்

ஒழுங்கான நம்பிக்கையான நல்ல வீட்டு வேலையாட்கள் தேள்வைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்தில்பெற்றுக்கொள்ளலாம். சமையற்காறர், குசினிவேலையாள், பூந்தோட்டக்கூலி, ஆயாள்மார் பீயோன் முதலியவர்களுக்கு உடனே கேட்கவும். கொம்மிஷன் மிகவும் கொஞ்சம்.

எஸ். எம். ஒலிவர் அன்ட்கொம்பனி,
முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

தந்தவைத்தியசாலை

கண்வைத்தியமும்பல்வயித்தியமும்

காலை8 மணிக்கும் 12 மணிக்குமிடையிலும் பின்னேரம் 2 மணிக்கும் 5 மணிக்குமிடையிலும் பரிசோதனை செய்யப்படும். ஞாயிறும் புதனும் வெளியிடங்களுக்கு போய்ப்பார்த்துக் கொள்ளுவோம். கண்கண்ணாடி, கண்ணாடிப்பிறேம் கம்பிகள் முறிந்துபோனால் உடைந்துபோனால் தயவு செய்து கீழேகாணப்படும் விலாசத்துக்கனுப்புங்கள். அருமையான "குறுக்லென்ஸ்" எனுங்கண்ணாடிகளும் பொன், றோல்ட்கோல்ட், வெள்ளி இவைகளாற் செய்யப்பட்ட கண்ணாடிப்பிறேம் கம்பிகளும் சீர்மையிலிருந்து வரவழைத்திருக்கிறோம்.

எந்தக் கண் வயித்தியருடைய ஏற்பாட்டின்படியும் கண்ணாடி கவனமாகச் செய்து கொடுக்கப்படும்.

சீர்மை மாதிரியாக பல்லுக்கட்டப்படும். நோவில்லாமற் பல்லுப்பிடுங்கப்படும்.

எஸ். சாள்ஸ் பத்திரன,
உத்தரவுபெற்ற தந்த வைத்தியர்,
பெரியதெரு,
யாழ்ப்பாணம்.

## விளம்பரம்

தேக்கு! தேக்கு!!

பர்மா தேக்குவியாபாரக்கம்பனி

அரியாத, அரிந்த தேக்குமாங்கள், பலகைகள், தளப்பலகை, நிலையன்னல்களுக்குரியமரம், கதவுச்சட்டம், தேக்கஞ்சிலாகை எதுவும் தேள்வையான அளவுகளில் கேட்டவுடனே அனுப்பப்படும். றெயிற் செலவு தள்ளி யாழ்ப்பாண விலைக்குக் குறையக் கொடுப்போம். ஒருமுறை ஓடர்செய்துபார்க்கவும்.

பர்மா தேக்குவியாபாரக் கம்பனி,
207, கிறேன்ட் பாஸ் றோட்,
கொழும்பு.

Burma Teak Trading Company,
207, Grand Pass Road.
Colombo,

## புதினக்குறிப்புகள்

(தொடர்ச்சி

### மதிப்புரை

### பூகோள தர்ப்பணம்.

இந்நூல் பூமிசாஸ்திரங்கற்கும் மாணவர் லேசிற் பாடஞ் செய்துகொள்ள மிகவும் வாய்ப்பானது. தெல்லிப்பழைப் புராதன ஆசிரியகலாசாலையின் மான்மியம் அதின் பழைய மாணுக்கர்களினாலும் அவராக்கிய நூல்களாலும் நன்கு விளங்கும். அக்காலம் சிறீமான் ஜெரெமியா புலவர் அவர்கள் செய்த பூமி சாஸ்திர செய்யுள் நடைகுறையா வண்ணம் அவர் மாணவரான தெல்லிப்பழை அச்சியந்திர சாலையின் மேற்பார்வைக்காரனுன சிறிமான் C. K. யேசுதாசன் அவர்கள் அக்கால பூகோளதர்ப்பணத்தைப் "புதுக்கியும் திருப்பியும் திருத்தியும் விரித்தும்" சிறப்பித்திருக்கிறார்கள் இந்நூல் தற்கால மாணவர்கட்கு பூமிசாஸ்திர அறிவையும் செய்யுளிற் புதிய முறையிற் பாடனஞ் செய்யுமறிவையும் உண்டாக்கக்கூடியது வேண்டுவோர் தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் புத்தக சாலையிலும், சுன்னுகம் திருமகள் அச்சியந்திர சாலையிலும், யாழ்ப்பாணம் சுண்டிக்குளியிலிருக்கும் மெஸ். S. Bastiampillai என்பவரின் புத்தக சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை சதம் 50. எமக்கனுப்பிய பிரதிக்காய் ஆக்கியோனுக்கு நன்றி கூறுகிறோம்.

### தமிழ்த் தொண்டன்.

இஃது வரமாட்சியியிலிருந்து வெளிவரும் வாரப் பிரசுரம். இதன் முதற் சிலம்பின் மூன்றும் பால் வரப் பெற்றோம். தமிழ்த் தொண்டு பணாஷத் தொண்டாயல்ல தமிழ்ச்சாதித்தொண்டாயிருப்பின் தமிழரின் பிரிவினைகளையும் மௌட்டீகங்களையுமகற்றும். எமக்கனுப்பிய பிரதியை நன்றியோடேற்று எம் பிரதியினையு மனுப்ப எண்ணினோம்.

### ஜோடாக மறைதல்

தென்இந்தியாவில் நீலகிரிமலைச்சரிவில் மோட்டர்காரில் கூனூரை நோக்கிப் பிரயாணஞ்செய்த மெஸ். W. H. மாட்டின் என்பவரும் துரைச்சாணியும் மோட்டர் வண்டியைவிட்டிறங்கி பக்கத்திலுள்ள பெரிய ஒரு ஆற்றின் வீழ்ச்சியைக்கண்டானந்திப்பதற்கு அவ்விடம் காட்டுக்குட்போயினர். திரும்பிவரும்போது பாதைவிலகி வெகுதூரம் அலைந்து மிகமோசமான ஆனைக்காட்டுக்குள் அபாயகரமாய் அகப்பட்டனர். காரிருளும் அவர்களுக்குச் சத்துராதியானது. இவர்களைத் தேடிப்போன ஒரு பெருங்கூட்டத்தவரும் இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை நடுக்காட்டில் யானைகள் மத்தியில் குடியற்ற ஒரு குடிசையில் இரவைக் கழித்தனர். மறுநாட்பகல் தேடிவந்தோரின் கண்ணுக்கெதிர்ப்பட்டதால் பாதையறிந்து தம்மில்லம் போய்ச்சேர்ந்தனராம்.

### பிரிந்த ஜோடு ஒன்றாய் மரித்தல்

கொலையும் தற்கொலையும். புத்தளப்பகுதியைச் சேர்ந்த அப்புகாமி என்ற ஒரு சிங்களவன் தன் மனைவி றன்மனிக்கா என்பவளை 17 இடத்திற் காயப்படுத்தி கடைசியாக அவளின் கழுத்தையுமறுத்துவிட்டு தானுமதே கத்தியாற் தற்கொலை புரிந்தான். இருவரும் பிரேதமாய் அக்கம்பக்கமாகக் கிடந்தனர். விவாகஞ்செய்து $1\frac{1}{2}$ வருடங்களாய் சந்தோஷமாய் சீவித்தாலும் சிலமாதங்களின்முன் ஏதோ திருப்தியீனமாக மனைவி புருஷனை விட்டுப் பிரிந்து த. பெற்றார் வீட்டிற்குப்போயிருந்தனள். உறவாக்க எத்தனித்த மற்றோரின் பிரயத்தனங்கள் வீணாக அப்புகாமி அவள் வீட்டிற்கு ஒருவருமில்லாததருணம் ஆயுதபாணியாய்ச் சென்று அவளைக் குரூரமாய்க் கொன்று தானும் தற்கொலைபுரிந்ததாகத் தெரிகிறது.

### 60 வயதிற் தற்கொலை

ஜீவனார்த்த திண்டாட்ட காரணமாக வேலையால் நீக்கப்பட்டலிவர்ப்பூல் நகரத்தைச்சேர்ந்த கென்றி அசல்டின் என்ற 60 வயதுக் கிழவன் சாப்பிடவழியின்றி தற்கொலை புரிந்தனனும்.

### சுரங்கத்தில் அமோக மரணம்

ஜேர்மனி தேசத்தில் அல்ஸ்டோவ் என்ற 1500 அடி ஆழமான வெடிமருந்துச் சுரங்கமொன்று திடீரென வெடித்ததால் உடனே 231 பேர் மாண்டனர். 21 பிரேதங்கள் எங்கென்று தெரியாது போயினவாம்.

### ஆட்கள்

எங்கள் வித்தியாகர்த்தாவாகிய சிறீமான் மெக்கிறேதரை அவர்கள் லீவுமுடிந்து மறுபடியும் இந்தமாதம் இரண்டாம் வாரத்தில் திரும்பிவந்து கொழும்பைச் சேர்ந்திருக்கிறார்கள். உபவித்தியாதலைவராயிருந்த ஞெபிசன்துரை அவர்கள் உதவி வித்தியாதலைவராய் முன்னிருந்தபடி கடமை நடத்துவார்.

இலங்கையைத் தரிசித்துப்போன இந்திய புலவர் சட்டோபாத்தியாய அவர்கள் சுயராச்சிய கொங்கிறசின் சண்டைத்தலைவராகும் இவர் சட்டவிரோதமான கூட்டங்கூடினதற்காகப் பிடிக்கப்பட்டு ஒருவருஷ சிறையில் விடப்பட்டிருக்கிறார் அமெரிக்காவில் நாட்டியப்புகழேந்தியான இந்திய அழகியான தன் மனைவியைத் தன்னைவிட்டு மேற்படியார் பிரித்துக்கொண்டாரென இவரில் ஒரு வியாச்சியமும் உண்டாம்.

வடமாகாண ஏசண்டரான பிறவுன் துரையின் இடத்துக்கு வடமத்தியமாகாண ஏசண்டரான டைசன் துரையவர்கள் வந்துகடமையைப்பார்த்து வருகின்றார்

—எங்கள் தேசாதிபதியான சேர் ஸ்ரான்லி யோன்ஸ் அவர்கள் தென் ஆபிரிக்காவின் கவர்ணர் செனரல் பதவிக்குச்சமனான உயர்ந்த கொம்மிஷனராக வேலை உயர்ந்து இன்னும் மூன்று மாசங்களால் இலங்கையை விட்டுப்புறப்பட்டுவிடுவர். இவர் இலங்கையில் மூன்றுவருஷம் கவர்ணராயிருந்து புது அரசாட்சி முறையில் நல்ல ஒழுங்குகளைச் செய்தவர்.

### ஆகாயக்கப்பல் களவாடின பையன்கள்.

16 வயதுடைய இருபையன்கள் ஆகாயக்கப்பலொன்றைத் திருடினர். புஸ்தகப்படிப்புமூலம் கப்பலோட்டுந்திறாணி ஒருவனுக்கிருந்தபடியால் கப்பல் ஆகாயத்திற்குகொண்டு போகப்பட்டது. ஆயின் மற்றவன் பதறிப்பயந்து கஷ்டப்பட்டதால் மாலுமியும் கஷ்டப்பட கப்பல் மலைமீது மோதிற்று. ஒருவன் உடனே இறக்க, மற்றவன் பொலீஸாரற் பிடிபட்டான்.

### ஞாயிறு மறியல்.

மதுபான வெறியுடன் மோட்டர் ரதம் செலுத்திய குற்றத்திற்காக ஓமகா என்றபட்டணத்தில் றெகாக் எனனுமொருவன் ப நாள் மறியல் விதிக்கப்பட்டான். தான் 5 நாள் மறியலுக்குப் போவதால் தனது வேலையை இழந்து விடக்கூடுமென்றும் அதனுல் தன்குடும்பம் வெகு கஷ்டமடைய நேரிடுமென்றுங் கூற ஞாயிறு தினங்களாக 5 ஞாயிற்றுக்கிழமைகளில் மறியற்சாலையிலிருக்கத் தனக்கு உத்தரவுகொடுக்கும்படி மன்றாடினன். நீதிபதி இரக்கமுற்று இதற்கிணங்கி 5 ஞாயிறு தினங்களில் மறியலிருக்கும்படி தீர்த்தனர்.

### நீதாசன வேலைபார்த்து மறியலாதல்.

இராஜதுரோக குற்றச்சாட்டுடன் H. D. ராசா என்பவன் பம்பாய் நகரக் கோட்டின்முன் கொண்டுவரப்பட்டான். நீதிபதி வரச்சில நிமிஷங்களின்முன் குற்றவாளியின் சிநேகிதனொருவன் மெதுவாக நீதாசனத்துக்கேகி நின்றபடி சனங்களை விழித்து "நீதி" செலுத்தினன். சுயராட்சியங்கிடைத்து விட்டதென்று குளறிக்கொண்டு குற்றவாளியைப்பார்த்து நீ "குற்றவாளியல்ல, போகலாம்" என்று ஆக்ஞாபித்தான். அப்பால் அவனுடைய நீதி பொலீஸ்காரனுடைய விலங்குளகப்பட்டு மறியற்கூடப்பக்கமாக நடந்திற்று.

### தபாலுள் வெடிக்குண்டு.

இந்தியாவில் ஐதிரபாத் என்ற ஊரில் நீதவானுக்கும் தபாற்கந்தோரதிபருக்கும் அனுப்பப்பட்ட காகிதங்களுள் வெடிக்குண்டுகள் அடைக்கப்பட்டிருந்தனவாம். திகதியடிக்கும்போதே தபால. பீசில் ஒன்று வெடித்ததாம். இது சுயராட்சிய கட்சியாரின் செய்கையென்று எண்ணப்படுகிறது. துப்பறிவும் பொலீஸ்மார் விசாரணை நடத்துகிறார்கள்.

### உலகத்தில் மோசமான கடற்குடா

இது அவுஸ்திரேலியாவின் தென்புறமாகத் தென்சமுத்திர ஓரமாயுள்ள கொம்மன்வெல்த் குடாவாகும். இதில் மோதும் கடற்காற்றானது சராசரி மணித்தியாலம் 44 மைல் வேகமுடையதாயும் வேளாவேளைகளில் ஏறக்குறைய 100 மைல் வேகமுமாயிருக்கிறதாம்.

---

## கடிதம்

### சமபோசனசம்வாதம்

அம்பலநாதன்-அந்தமெக்கிறையின் கொடிய சமபோசனபிரமாணத்தால் நமது பிள்ளைகள் பஞ்சமருடன் பந்தியிலிருந்து உண்ணவேணடிவந்ததே.

சபாபதி. (ஆச்சரியத்துடன்)எங்கே ஐயா.

அம். கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலையில்.

சபா. பெருப்பட்டங்களைப்பெற்றதங்களைப்போன்றோர்அதைத்தடுத்தற்குமுயற்சிக்கலாமே.

அம். ஆம் அப்படித்தான்முயற்சிக்கின்றோம். அதாவது கலாசாலைக்குப்புறம்பே மாணவரின் சொந்தச்செலவில் விடுதியமைக்கப்போகின்றோம். அர்தப்பிச்சைச்சோறுதேவையில்லை.

சபா. "கண்ணின்று கண்ணறச் சொல்லினும்சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச்சொல்" என்றபடி நானசிலசந்தேகங்களைத தங்கள்முன்னிலையில் வெளியிடப்போகின்றேன். ஐயா தாங்களும் பிறரும் செய்யநினைக்கும் தொண்டு எவராலும்(காந்தியடிகளாலும்)வியக்கத்தக்கதொன்றே எனினும் இதனிலும் பார்க்க அத்தியாவசியகம் செய்யத்தகும் பிறிதொரு தொண்டு இருக்கின்றதே.

அம். எது. சொல்லுதி சொல்லுதி.

சபா கலாசாலையிலே உங்கள் சாதியிற்பிறந்தசிலர் சமையல் செய்து எல்லாமாணவருக்கும் உணவுபரிமாறுவர். அம்மாணவர்களும் ஒருவர் பாத்திரத்தில் இன்னொருவர் முட்டாது உண்பர். ஆனல் எங்கள் வீடுகளிலே உங்கள்(உயர்)சாதியினர் வந்துகோடிகளிற் குந்தி எம்மவரின் பெயர்களையும் நீட்டி (கணபதி=கணபதிபிள்ளை) (முருகன்=முருகு)பல்லை காட்டி, கலவைக்கள்ளைக்குடித்துச்சமபோசனத்திலும் மேலானபோசனத்தைச் செய்கிறார்களே. இதைத்தொலைத்தற்கன்றோ பகிரதப்பிரயத்தனம் செய்யவேண்டும். மேலும்உங்கள் சாதிமக்கள் மதுபானஞ் செய்தலை விடுவதுமிக்க அரிதாகும். ஆதலால் உங்களுள்ளே சிலர் கள்ளுச்சேர்க்கவேண்டும். சேர்த்து ஈர்மவர்கள்வீடுதோறும்போகின்ற உயர்வகுப்பு மக்களைத்தடுத்து உங்கள் பக்கத்தவர்கையால் அக்கள்ளைக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்தாற்றான் மூர்த்தியதொண்டும் உண்மையின் பாற்படுவதாகும். இன்னும் பிச்சைச்சோறு என்றீர்களே. இதற்குமுந்தியவருடங்களில் உங்கள் மாணவர்கள் உண்டபிச்சைச்சோற்றையெல்லாம் இனிஉமிழ்வித்து விடுங்கள்.

இக்காலம் இலங்கை அரசினருக்குக்கடன்இருப்பதால் தங்களைப் போன்றோர் உஞற்றிய இந்தத் தொண்டு சிறிது துணைச்செய்யாததென்பது மாத்திரம் விதந்துரைக்கத்தக்கதாகும்.

இன்னும் பஞ்சமர்காணப்புசித்தல் தோஷமாகுமென்றும் ஒரு நியாயம் உரைக்கின்றனர். அக்கலாசாலையிலே 1924 ம் ஆண்டுதொடக்கம் பயிற்சி பெற்ற நமது மாணவர்கள் வெளியேயிருந்து உண்டாலும உள்ளேயிருந்து மாணவர்கள் போசனஞ்செய்வதைக் காண்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படியானுல் அந்த நிருஷ்டிதோஷத்திற்கு என்ன நிவாரணஞ் செய்தார்கள். இந்தச் சமபோசனம் சைவவிரோதமென்றால் இப்போது ஆசனத்திலிருந்துபோசனஞ் செய்வது சைவ (தமிழ்) ஆசாரத்துக்கு விரோதமல்லவா மேலும் மெய்கிறை யென்று நீங்கள்தானே சொல்லுகிறீர்கள்,

அம். பின்னர் எப்படிச் சொல்வது. ஸ்ரீல ஸ்ரீ மெய்க்கிறத் தெய்வம் என்று சொல்லுகிறதா?

சபா. அப்படிஅல்லஐயா. மெய்க்கு+இறை அதாவது உண்மைக்குத்தலைவர் என்று நீங்களே சொல்லுகிறீர்கள். ஆதலால் அவர் உண்மையே விதிப்பார். அதையே நிலைநாட்டுவார். அன்றியும் அவர் பிரமஸ்ரீ ஐயர் வீட்டிலே முத்துச்சாமி நாடார் கிருகத்திலே மீனாச்சி சுந்தரம்பிள்ளை இல்லத்திலே, நந்தன்மந்திரத்திலே, நடராசப்பத்தர் உறைவிடத்திலே, சைவமடத்திலே, தேவாலயத்திலே யாவரும் சமபோசனம் பண்ணவேண்டுமென்று பிரமாணம்விதித்தாரா இல்லையே. பொதுஸ்தாபணத்தில் மாத்திரம் போசனஞ செய்யுமாறு ஆஞ்ஞாபித்தார். அதுவும் ஒருவருக்கும் பங்கமில்லாமல் இலகுவில் அனுசரிக்கத்தக்கது. ஆனல் அது சைவத்துக்கு மாறானதென்று தங்களைபோன்றோர் கூட்டங்களிற் பேசியும் எழுதியும் மிஸ்ரர் மெய்க்கிறே அவர்களை கண்டித்தபடியாலன்றோ அது இவ்வாறாக வற்புறுத்தப்படுகின்றது. ஆவசியகமற்ற இடந்தோறும் இழுத்து எங்கள் உயரியசைவத்தையும் பிசக்குகிறீர்களே. பாவம், சிலமாணவர்கள் புறவிடுதிச்செலவுக்குமுட்டுப்படுவார்களென்றும் இந்தக்குழுவினரையுபேட்சிப்பார்களென்றும் கருத்தாகும். ஆகலின் ஒரு சங்கவாயிலாகப் பொருளீட்டிக்குறித்த மாணவரின் செலவையிறுப்பது உண்மைய னபுண்ணியமாகும்.

வதிரி. இங்ஙனம்,
2-11-30 சனதருமவாதி

---


## SAVE MONEY!

AND MAKE ALL YOUR PURCHASE FROM US.

We are Direct Importers of Portland cement. Barbed Wire, Iron Bars. Expanded Metal, Galvanized Corrugated Roofing Sheets, Galvanized Plain Sheets. Asbetos Cement, Corrugated Roofing Sheets and Flat Sheets for ceiling and partitions and all other building materials.

We import all Hardware goods direct from England and the Continent and are threfore able to offer better prices than Local Dealers.

Please make your enquiries either from our Branch Office.

N. VAITILINGAM & Co.
Grand bazaar,
Jaffna.
or from us

N. VAITILINGAM & Co.
Estate Suppliers & Hardware Merchants,
31, Third Cross Street,
Colombo.

Telephone, 2266
Telegrams :—"Envaitilin".

---

## Notice

GOOD NEWS TO JAFFNA

**Servant Problem solved at last.**

**If you require reliable Domestic Servants go to:**

S. M. OLIVER & CO.,
1st Crss Street,
Jaffna.

Head Office,
285, Trincomalie Street,
Kandy.

Agents all over the Island.

---

## Dental Surgery

S. CHAS. PATIRANA

LICENSED DENTIST & MANUFACTURING OPTICIAN
MAIN STREET, JAFFNA

CONSULTATION HOURS, 8 A. M. TO NOON —2 P. M. TO 5 P. M (SUNDAYS AND WEDNESDAYS BY SPECIAL APPOINTMENTS.

When you break your spectacle frames, speck arms or lense of any pattern, please send them to the above address. They will be repaired accurately and promptly and also we have large supply and great variety of the most desirable kinds and styles of Crooke's lenses and best quality Rolled Gold and nickeled silver frames and other mountings directly imported from Europe.

Our charges are always uniform and reasonable and all eye doctors' prescription will be made carefully and accurately.

---

## THE WELL-KNOWN

HOUSE FOR BRASS GOODS

All Reputable Builders and Contractors buy their supply from us. BRASS LOCKS, PADLOCKS, BRASS HINGES, BRASS BOLTS AND BRASS SCREWS

from

**Leading English, German and continental Makers**

**OUR QUALITY IS OuR GUARANTEE**

We have studied local demands and requirements and know as specialists should, what articles would suit out our numerous patrons.

**Our experience and knowledge is at their service FREE**

We import "PYRAMID BRAND" brass beds
made by the world celebrate makers
Both in point of quality and value
We can satisfy you

**JUST BUY ONE AND SEE IF WE CANNOT.**

A. L. M. ABDUL LATIFF,
Nos. 3,16, 130,, 3rd Cross Street,
Colombo.
PHONE, 1113. Telegrams "ALMAL".

---

## விளம்பரம்

கொழும்பு மூன்றாங்குறுக்குந்தெருவில் இருக்கும் எங்கள் சாப்பில்

வகைவகையான இரும்புச் சாமான்கள் பித்தளைச் சாமான்கள், இரும்புக்கம்பிகள், பித்தளைக்கம்பிகள், ஈயக்கம்பிகள், மண்வெட்டி, பிக்கான்வகைகள், அலவாங்குகள். இரும்புப்பூட்டுவகைகள், பித்தளைப்பூட்டு வகைகள், லாச்சிப்பூட்டுகள், பெட்டிப்பூட்டுகள், எண்ணைவகைகள், மைவகைகள், வாணிசுவகைகள், இரும்புக்கட்டில்கள், பித்தளைக்கட்டில்கள், பிணைச்சல்வகைகள், திருகுவகைகள், வீட்டுக்கட்டிடத்துக்கு வேண்டிய புதுவிதமான சகலதினிசுகளும் மிக உயர்ந்த இனமான குறைந்த இனமான சகல சாமான்களும் சில்லறையாகவும் தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளுக்குங் கொந்திறாத்துக் காரருக்கும் கொடுக்கும் விலையில் சில்லறைக்கு உடனே அனுப்பி வைப்போம்.

### ஒருமுறை எழுதிப்பாருங்கள்

அமெரிக்கா, இங்கிலாந்து, சேர்மனி, யப்பான் முதலிய இடங்களிலிருந்து நேரே அழைப்பிக்கிறோம்.

சகலவிதமான கண்ணாடிகளும் நிறக்கண்ணாடிகளும் வேண்டிய இனத்தில் வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ளலாம். ஓடர்செய்த அடுத்த நாளில் சாமான்கள் கையிலிருக்கச்செய்வோம்.

விலாசம்.

ஏ. எல். எம். அப்துல் லாத்திவ்
3. மூன்றாம்குறுக்குத்தெரு,
கொழும்பு.


---

Printed by Mr. C. K. Yesuthason at the A. C. M. Press, Tellippalai Edited and published by Mr. Joel Paul, Building Contractor, (Secretary, the Jaffna Depressed Tamils' Service League) on behalf of the Service League at Tellippalai.